**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி : 30.04.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில் இத்தாலிய பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஸ்ரீநகர்-கத்ரா வந்தே பாரத் விரைவு ரயிலின் நீட்டிக்கப்பட்ட சேவையை மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று தொடக்கி வைத்தார்.

10-வது தேசிய சுகாதார உச்சிமாநாட்டினை மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா இன்று சண்டிகரில் தொடக்கி வைத்தார்.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027 பணிகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

*ராஜ்நாத் சிங் (12)*

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில் இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. Guido Crosetto-வுடன் இருதரப்பு உறவுகள், மேற்காசியாவின் தற்போதைய நிலைமை, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சனைகள் குறித்து விவாதித்தார். இந்தியாவின் ஆத்ம நிர்பர் பாரத் திட்டம் மற்றும் இத்தாலியின் பாதுகாப்பு ஒத்துழைப்பு முயற்சி ஆகியவற்றின் கீழ்

பாதுகாப்புத்துறையில் பரஸ்பரம் பயனளிக்கும் வகையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் விவாதித்ததாக திரு. ராஜ்நாத் சிங் தமது சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார். மேலும், இந்த சந்திப்பின்போது, இருநாடுகளின் ஆயுதப்படைகளுக்கிடையிலான, 2026-27-ஆம் ஆண்டிற்கான ராணுவ ஒத்துழைப்பு திட்டம் ஒன்றும் பரிமாறிக்கொள்ளப்பட்டதாக திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ் -1 (05)*

மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ஸ்ரீநகர்-கத்ரா வந்தே பாரத் விரைவு ரயிலின் நீட்டிக்கப்பட்ட சேவையை இன்று ஜம்மு தாவி ரயில் நிலையத்திலிருந்து கொடியசைத்துத் தொடக்கி வைத்தார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்... **(வாய்ஸ்)**

*அஸ்வினி வைஷ்ணவ் வாய்ஸ் 2 (18)*

**(வாய்ஸ்)**

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு.அஸ்வினி வைஷ்ணவ் கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும், ஜம்மு-காஷ்மீரின் 370ஆவது சட்டப் பிரிவு ரத்து செய்யப்பட்டதையடுத்து, இப்பகுதி தொடர்ந்து வளர்ச்சியைக் கண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் கத்ராவிலிருந்து காஷ்மீருக்கு வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடக்கி வைத்ததாகவும், அதன் பின்னர், 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் இதன் சேவையை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். முன்னர், ஸ்ரீநகரிலிருந்து, ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி கத்ரா வரை 8 பெட்டிகளுடன் இயக்கப்பட்ட இந்த ரயில், இப்போது ஜம்மு தாவி வரை 20 பெட்டிகளுடன் இயக்கப்படும். நீட்டிக்கப்பட்ட இந்த ஜம்மு தாவி-ஸ்ரீநகர் வந்தே பாரத் விரைவு ரயில் சேவை, வரும் மே மாதம் 2ஆம் தேதியிலிருந்து இயக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தடத்தின் முதல் ரயில் சேவை ஜம்மு தாவியிலிருந்து காலை 6.20 மணிக்குப் புறப்பட்டு, ஸ்ரீமாதா வைஷ்ணோ தேவி கத்ரா, Reasi மற்றும் Banihal ஆகிய நிலையங்களில் நின்று, காலை 11.10 மணிக்கு ஸ்ரீநகரை அடையும். மறு மார்க்கமாக ஸ்ரீநகரிலிருந்து பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டு, மாலை 6.50 மணிக்கு ஜம்மு தாவியை வந்தடையும்.

*பிரல்ஹாத் ஜோஷி (12)*

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, இன்று புதுடெல்லியில் இந்திய

ராணுவ அதிகாரிகளைச் சந்தித்தார். ஆயுதப்படைகளுக்கான கொள்முதல் முறைகளை வலுப்படுத்துவது குறித்து அப்போது ஆலோசிக்கப்பட்டதாக அமைச்சர் சமூக ஊடகப்பதிவில் கூறியுள்ளார். ஆயுதப்படையினருக்கு இயற்கை உணவுப் பொருட்களை அறிமுகப்படுத்துதல், அரிசி மற்றும் மாவு போன்ற உள்நாட்டுத் தயாரிப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் உயர்தர தானியங்கள் மற்றும் பாஸ்மதி அரிசியின் கொள்முதலை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்தும் கலந்தாலோசித்ததாகவும் திரு. ஜோஷி கூறினார். இதன் மூலம் விவசாயிகளுக்கு ஆதரவு அளிப்பதுடன் ஆயுதப்படைகளுக்கு உயர்தர சத்தான உணவு பொருட்கள் வழங்குவதை மத்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*ஜே.பி. நட்டா-1 (18)*

“பொது சுகாதார அமைப்புகளில் சிறந்த மற்றும் பின்பற்றத்தக்க நடைமுறைகள் மற்றும் புதுமைகள்” குறித்த 10-வது தேசிய உச்சிமாநாட்டினை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா, ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப் சிங் சைனியுடன் இணைந்து இன்று சண்டிகரில் தொடக்கி வைத்தார். தொடக்க அமர்வில் உரையாற்றிய திரு. நட்டா, இந்த முன்னெடுப்பு, சுகாதாரப் பணியாளர்கள் முதல், சுகாதார ஆர்வலர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் என ஆயிரக்கணக்கான சுகாதார பணியாளர்களுக்கு பெரும் வசதியை ஏற்படுத்தி தரவுள்ளது என்றார். மேலும், கர்ப்பிணித்

தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் என அனைத்து பயனாளிகளும் தங்களின் தனிப்பட்ட சுகாதார பதிவுகளை பராமரிப்பதற்கும் உதவும் வகையில் அமையும் என்றும், தேசிய சுகாதார இயக்கத்தின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் பெருமிதத்துடன் தெரிவித்தார். சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில், ஆரம்ப சுகாதாரத்தை வலுப்படுத்துதல், டிஜிட்டல் சுகாதாரப் புதுமைகள் மற்றும் சேவை வழங்கல் அமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்த அமர்வுகள், கருப்பொருள் சார்ந்த விவாதங்கள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவை இடம்பெறும்.

*ஜே.பி. நட்டா -2 (04)*

பல்வேறு பொது சுகாதார சவால்களை எதிர்கொள்வதற்காக, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மேற்கொண்டுள்ள புதுமையான நடைமுறைகளை வெளிப்படுத்துவது, அங்கீகரிப்பது மற்றும் ஆவணப்படுத்துவதே இந்த இரண்டு நாள் உச்சிமாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

*ஆயுஷ்மான் பாரத் (11)*

2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆயுஷ்மான பாரத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இத்திட்டத்தின் மூலம் 10 கோடியே 74 லட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருவதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இந்த திட்டம் கோடிக்கணக்கான எழை மக்களின் வாழ்வில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியதோடு அவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார். ஆயுஷ்மான் பாரத் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை முன்னிட்டு, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் உயரிய மருத்துவ சிகிச்சைகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மத்திய அரசு இந்த திட்டத்தை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

*காப்பீட்டுத்துறை (13)*

சமூகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பிற்கான அடித்தளமாக காப்பீடு திகழ்கிறது என்றும், இத்துறையின் வளர்ச்சி சீராக உள்ளதாகவும், மத்திய அரசு கூறியுள்ளது. காப்பீட்டுத்துறை வளர்ச்சியைப் பொறுத்தவரை உலகளவில் இந்தியா 10ஆவது இடத்தில் உள்ளதாகவும் மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களில் செயல்பாடுகள் குறித்து நிதி சேவைகள் துறையின் செயலர் திரு. நாகராஜூ இன்று புதுடெல்லியில் ஆய்வு மேற்கொண்டார். முதலீட்டுக்கான வாய்ப்புகளை அதிகரிக்குமாறும், காப்பீட்டுத் திட்டங்களை வடிவமைப்பதில் புதுமையைக் கையாளுமாறும் காப்பீடு நிறுவனங்களை அவர் கேட்டுக்கொண்டார். காப்பீடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் டிஜிட்டல் மயமாக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. நாகராஜூ வலியுறுத்தினார்.

*உச்ச நீதிமன்றம் (09)*

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் கருக்கலைப்பு செய்வதற்கு வகை செய்யும் சட்ட திருத்தத்தைக் கொண்டுவருவது குறித்து பரிசீலிக்குமாறு உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக, டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் 20 வாரத்திற்கும் கூடுதலான கருவை கலைக்கும் வகையில் இந்த சட்ட திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

*மக்கள் தொகை காரைக்கால் 1(05)*

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027 பணிகளை முன்னிட்டு புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து காரைக்கால் மாவட்ட ஆட்சியரும், முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரியுமான திருமதி இஷிதா ராட்டி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்... **(வாய்ஸ்)**

*மக்கள் தொகை காரைக்கால் வாய்ஸ் 3(18)*

**(வாய்ஸ்)**

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பணியின் முதற்கட்டமாக, வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு பணிகள், வரும் மே மற்றும் ஜூன் மாதங்களில் நடைபெறவுள்ளன. இதன்படி, பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இணையதளம் வாயிலாகத் தகவல்களைப் பதிவு செய்யும் 'சுய கணக்கெடுப்பு' முறை மே மாதம் 17ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். அதனைத் தொடர்ந்து, ஜூன் 1ஆம் தேதி முதல் ஜூன் 30ஆம் தேதி வரை கணக்கெடுப்பு அலுவலர்கள் நேரடியாக வீடுகளுக்கு வந்து, குடிநீர், மின்சாரம், இணைய வசதி உள்ளிட்ட 33 வகையான விவரங்களைச் சேகரிப்பார்கள். கணக்கெடுப்பு அலுவலர்கள் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான மற்றும் துல்லியமான பதில்களை வழங்குவது பொதுமக்களின் சட்டப்பூர்வ கடமையாகும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் அனைத்துத் தகவல்களும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். நாட்டின் எதிர்காலத் திட்டமிடல் மற்றும் தொகுதி வரையறை போன்ற முக்கியச் செயல்பாடுகளுக்கு இத்தரவுகள் அவசியமானவை என்பதால், காரைக்கால் மாவட்ட மக்கள் அனைவரும் இந்தப் பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

*மே தினம் (19)*

நாளை மே தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் தமது வாழ்த்துச் செய்தியில், உழைப்பாளர்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் என்றும், பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாக இருப்பவர்கள் என்றும் கூறியுள்ளார். அவர்களுடைய நலனை, வாழ்வை, வாழ்வாதாரத்தை பாதுகாப்பதில் நம் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதையே இந்நாள் உணர்த்துவதாக தெரிவித்துள்ளார். மேலும், உலகமெங்கும் உள்ள உழைக்கும் மக்களின் பெருமை மற்றும் தியாகத்தை பறைசாற்றி அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதையே இந்த உழைப்பாளர் தினம் முன்னிறுத்துவதாகவும்

திரு.கைலாஷ் நாதன் கூறியுள்ளார். உழைக்கும் மக்கள் அனைவரும் எல்லா வளமும், நலமும் பெற்று நல்வாழ்வு வாழ மனதார வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மே தினத்தையொட்டி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வைத்திலிங்கம், வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், புதுச்சேரி யூனியன் பிரதேச தொழிலாளர்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும், செய்யும் தொழிலில் திறமையை வளர்த்து, தொழிலை நவீனமாகவும், சிறப்பாகவும் செய்து வாழ்க்கையில் மேலும் உயர மக்கள் அனைவரையும் வாழ்த்துவதாகவும் கூறியுள்ளார்.

*பிரேம் குமார் காரைக்கால் (10)*

இந்தோ-திபெத்திய எல்லை காவல்படையில் பணியாற்றி, ஜம்மு-காஷ்மீரில் நாட்டின் பாதுகாப்பிற்காக தனது இன்னுயிரை ஈந்த பொலாகம் கிராமத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் பிரேம் குமாரின் நினைவு தினத்தை முன்னிட்டு காரைக்கால் மாவட்டம், டி.ஆர். பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள அவரது நினைவுச்சின்னத்தில், மாவட்ட சார்பு ஆட்சியர் செல்வி எம். பூஜா மலரஞ்சலி செலுத்தினார். பிரேம்குமாரின் தியாகத்தைப் போற்றி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அவரது குடும்பத்தினர் மற்றும் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மௌன அஞ்சலியும் செலுத்தினர்.

*விளையாட்டு (08)*

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் உக்ரைனை வென்றது. லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் உக்ரைனுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவின் Manika Batra, Diya Chitale, Yashaswini Ghorpade ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றிரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் தொடங்கும் ஆட்டத்தில் பெங்களூரு- குஜராத் அணிகள் மோதுகின்றன.

*ஜிப்மர் (05)*

புத்த பூர்ணிமா தினத்தையொட்டி நாளை மே 1ஆம் தேதி புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் புறநோயாளிகள் சிகிச்சைப்பிரிவு இயங்காது என்றும், ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனினும், அவசர சிகிச்சைப் பிரிவு வழக்கம் போல் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைப்புச் செய்திகள்

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று புதுடெல்லியில் இத்தாலிய பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஸ்ரீநகர்-கத்ரா வந்தே பாரத் விரைவு ரயிலின் நீட்டிக்கப்பட்ட சேவையை மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று தொடக்கி வைத்தார்.

10-வது தேசிய சுகாதார உச்சிமாநாட்டினை மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா இன்று சண்டிகரில் தொடக்கி வைத்தார்.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027 பணிகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/KR/VM**